Telephone Nos.

Minister } 2784832 Fax: 2784825

Secretary } 2784812

Office } 2785141-50 Fax: 2784846

E-mail : isurupaya@moe.gov.lk

Your No. } ....................

Ministry of Education

"Isurupaya"

Battaramulla.

My No. } ED/01/12/10/11/01

Date } 2006.12.06

2006/45

சுற்று நிருப இலக்கம் : 2006/45

மாகாண கல்விச் செயலாளர்கள்,
மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
பிரதேச பொறுப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து அதிபர்களுக்கும்.

**<u>முாணவர்களின் பாடசாலை வரவினை அதிகரித்தல் மற்றும் பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களால் நிதி அறவீடு செய்து பிரத்தியேக வகுப்புக்களில் கற்பிப்பதனை தடுத்தல்.</u>**

பாடசாலைக் கல்வியில் மாணவர்களது முழு ஆளுமையினையும் கட்டியெழுப்பும் நோக்கிற்கு எதிராக பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வெளியே நடைபெறுகின்ற மேலதிக பிரத்தியேக வகுப்புக்களுக்கு பாடசாலை மாணவர்களை கலந்து கொள்ளச் செய்வதோடு, அரச சேவையின் கீழ் நியமனம் பெற்று ஆசிரியர்களாக கடமை புரிகின்ற ஒரு சில ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் அரசு தமக்கு அளிக்கின்ற அரச கடமைகளில் கவனம் செலுத்தாது நிதி அறவீடு செய்து, பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துவதாக பல முறைப்பாடுகள் இவ்வமைச்சிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதேவேளை இந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்கின்ற வேளையில் அது முற்றிலும் உண்மையானதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**02.**அரச பாடசாலைகளில் க.பொ.த (உ/த) இல் கல்வி கற்கின்ற இருவருட காலத்தில் தமக்கு திட்டமிடப்பட்டு வழங்கப்பட்ட பாடத்திட்டத்தினை நிறைவு செய்வதற்காக அங்கு நடைபெறுகின்ற பாடசாலை சார் செற்பாடுகளை சரியாக நிறைவேற்றுவதற்கு 12 ஆம் மற்றும் 13 ஆம் தரங்களில் கற்கின்ற மாணவர்கள் முறையாக பாடசாலைக்கு சமூகமளிப்பது அவசியமாகும். மேலும் பாடசாலை மட்ட பாடத்திட்டத்தின் படி பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இது உதவியளிக்கின்றது. ஆனால் சில மாணவர்களது வருகை மோசமான நிலையில் காணப்படுவதன் காரணமாக அதனை அதிகரிக்கச் செய்வதற்கு கீழ் வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

I. க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கல்வி கற்கின்ற அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற வேளையில் பாடசாலை நடைபெற்ற நாட்களின் எண்ணிக்கையில் குறைந்தது 80% சத விகித வரவு காணப்படுதல் வேண்டும் என்பதோடு, இதனை பூர்த்தி செய்யாத மாணவர்களை பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை என்பதற்கான நடவடிக்கைகளை அதிபர் மேற்கொள்ள வேண்டுமென நான் வலியுறுத்துகின்றேன்.

II. அதேவேளை 80% சத விகித வரவு காணப்படாத மாணவர்களினால் அல்லது அவர்களது பெற்றோர்களால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்வைக்கப்படுகின்ற வேண்டுகோளை பாடசாலை ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகும். அதனை ஆராய்ந்து பார்க்கின்ற வேளையில் குறித்த வகுப்பாசிரியர் மற்றும் குறித்த பகுதித் தலைவர் ஆகியோரது கருத்துக்களை கவனத்தில் கொண்டு பாடசாலை முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அதிபரினால் தீர்மானம் எடுக்க முடியும். பாடசாலைக்கு சமூகமளிக்க இயலாத, கற்றல் நடவடிக்கையில் கலந்துகொள்ள முடியாத நோய் நிலமையினால் அல்லது வேறு ஏதும் நியாயமான காரணத்தினால் சமூகமளிக்க முடியாதிருப்பின் மாத்திரம் அது தொடர்பில் உறுதி செய்துகொண்டு அம்மாணவர் பரீட்சையில் தோற்றுவதற்கு முன்வைக்கப்படுகின்ற வேண்டுகோள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தினை எடுப்பதற்கு பாடசாலை முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் படி அதிபருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறான தீர்மானத்தினை தெளிவாக எழுத்து மூல ஆவணமாக வைத்திருப்பது கட்டாயம் என்பதோடு, எச்சந்தர்ப்பத்திலும் அக்கோரிக்கை படிவத்தினை இவ்வமைச்சிற்கோ அல்லது ஏனைய கல்வி அதிகாரிகளுக்கோ அனுப்ப வேண்டாமென நான் தங்களை வலியுறுத்துகின்றேன்.

III. எதிர்காலத்தில் க.பொ.த (உ/த) வகுப்புக்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்கின்ற வேளையில் அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு குறைந்தளவு 80% சத விகித வரவு கட்டாயம் மற்றும் 12 ஆம் 13 ஆம் தரங்களுக்குரிய வழக்கமான மதிப்பீடுகளை இவர்கள் நிறைவு செய்ய வேண்டுமென்பதோடு, இத்தகுதிகளை நிறைவு செய்யாத மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாது என்பதனை அதிபர் ஊடாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மேலும் தங்களை நான் வலியுறுத்துகின்றேன்.

**03**. எவ்வாறாயினும், மாணவர்களுக்கு பாடசாலை வரவில் ஆர்வத்தினை ஏற்படுத்த வேண்டியதும், தாம் கற்பிக்கின்ற பாடத்தினது பாடத்திட்டத்தினை உரிய வகையில் நிறைவு செய்வதற்குரிய பரிகாரக் கற்பித்தல் வேலைத்திட்டத்தினை மேற்கொள்ள வேண்டியதும், ஆசிரியர் மாணவர் பிணைப்பின் ஊடாக மாணவர்களை கற்றலில் ஈடுபட ஆர்வம் ஊட்டுதல் என்பனவும் ஆசிரியர்களது பொறுப்பாகும்.

**04.** கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்கள் இவ்வாசிரியர்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. உயர்ந்தளவான சம்பளமும் வழங்கப்படுகின்ற நிலையில் பாடசாலைகளில் தமக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை முறையாக நிறைவேற்றாது பாடசாலை நேரத்தில் நிதி அறவீடு செய்து பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துவற்கு உந்துதலாக இருப்பதென்பது கவலையளிக்கின்றதொரு விடயமாகும். இவ்வாறான ஆசிரியர்கள் தமக்கு அரசினால் வழங்கப்பட்ட இலவசக் கல்வியின் காரணமாகவே நாம் இந்நிலையில் உள்ளோம் என்பதனை மறந்து செயற்படுவது வேதனையளிக்கின்தொரு விடயமும் கூட.

**05.** எவ்வாறாயினும் அரச சேவையில் ஆசிரியர் நியமனம் பெற்று கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் தாம் கற்பிக்கின்ற பாடத்தினை தமக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அச்செயற்பாட்டினை நிறைவேற்றுகின்ற வேளையில் தம்மிடமிருந்து கல்வி பெறுகின்ற அனைத்து மாணவர்களது இயலுமை மற்றும் தேவைகளை அறிந்து அதன் பிரகாரம் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். ஆனால் இங்கு தமது பாடத்திட்டதினை உரிய வகையில் நிறைவு செய்ய வேண்டியதும் மற்றும் பாடசாலையில் தனக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவது பாடசாலை நேரத்தில் ஆகும். ஆனால் அதற்கு வெளியே தமது பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் காரணமாக பாடசாலையில் அப்பாடத்திட்டத்தினை நிறைவு செய்ய இயலாத நிலைமை தோன்றுகின்றமையோடு, பாடசாலை மாணவர்களில் கணிசமானோருக்கு இது பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. எனவே அரசினால் கல்விக்காக செலவு செய்வதென்பது இங்கு பயனற்றதொன்றாக மாறுகின்றது. எனவே கீழ் குறிப்பிடப்படும் விடயத்தில் தங்களின் அவதானத்தினை செலுத்துமாறு தங்களை நான் வலியுறுத்துகின்றேன்.

I. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அரசினால் வழங்கப்படுகின்ற வசதிகளை கவனத்தில் கொண்டு பாடசாலை நேரத்தில் எந்தவொரு பாடத்திற்கும் பாடசாலை மாணவர்களிடமிருந்து நிதி அறவிடுதல் இலவசக் கல்வியின் நோக்கத்திற்கு முரணானது என்பதோடு, அவ்வாறான செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதொன்றுமாகும்.

II. பாடசாலை நேரத்தில் குறித்த நேர அட்டவணையின் படி கற்றலுக்கான வளம் காணப்படாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் அனுமதியினைப் பெற்று மாகாண கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களது எழுத்து மூல அனுமதியின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் அல்லது வசதிகள் சேவைகள் கட்டணம் ஆகியவற்றின் மூலம் அவ்வாறான ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்க முடியும்.

III. பாடசாலையில் ஏதாவதொரு பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் காணப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த பாடத்திற்கு ஆசிரியரை பெற்றுக்கொள்வதற்கு மாகாணப் பாடசாலையாயின் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் / மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் அதனை தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு, அது தேசியப் பாடசாலையாயின் அதனை தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் அவர்களுக்கு தெரியப்படுத்தி தேவையான ஆசிரியர்களை பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

IV. அரச சேவையில் ஆசிரியர் நியமனமொன்றைப் பெற்று பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் குறித்த கடமை நேரத்தில் பாடசாலையில் அல்லது பாடசாலைக்கு வெளியில் நிதி அறவீடு செய்து பிரத்தியேக கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட முடியாது.

**06**. மேற்படி 5 ஆவது பந்தியின் i ஆவது மற்றும் iv ஆவது உப பந்திகளில் குறிப்பிடப்படுகின்ற விடயங்களின் படி அரசினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சின் குறித்த சுற்று நிருபத்தை மீறுதல் மற்றும் தாபன விதிக்கோவையின் xxx அத்தியாய i ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீறப்படுமாயின் அவை ஒழுக்காற்று நடவடிக்கைக்குரியது என்பதனை நான் தங்களுக்கு வலியுறுத்துகின்றேன்.

**07**. அவ்வாறு பாடசாலை நேரத்தில் விடுமுறை பெறாது, சமூகம் தராது மற்றும் பாடசாலை வேளையில் பிரத்தியேக வகுப்புக்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தொடர்பாக தேடியறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சில் விசேட பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளது என்பதோடு, தற்பொழுதுவரை அமைச்சிற்கு கிடைக்கப் பெற்றுள்ள தகவலின் பிரகாரம் அவ்வாறான ஆசிரியர்களை அடையாளம் காண்பதென்பது சிரமமானதொன்றல்ல என்பதனையும் அவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.

**08**. மேலும் பாடசாலை நேரத்தில் முறைப்படி மற்றும் ஏற்றுக்கொள்ளும் விதமான காரணங்களோடு விடுமுறை பெற்று அல்லது அவ்வாறு பெறாது ஆசிரியர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அது தொடர்பில் அதிபர் அவர்களே பொறுப்புக்கூற வேண்டும். இவ்வாறான நிலைமை உறுதிபடுத்தப்படுமாயின் அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**09.** பாடசாலை வேளையில் நிதி அறவீடு செய்து கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை தடுப்பதனை நோக்காகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள 2005.05.10 ஆம் திகதிய 2005/18 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு அப்பால் இச்சுற்று நிருபம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை நான் தங்களுக்கு வலியுறுத்துகின்றேன்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.